**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

INTEGRATED INVESTIGATION FORM I

8069814

C

03/AC/2020/TLR

1. District : மாவட்டம் Thiruvallur PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption Year ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் Date நாள் 10.09.2020 10.00 hrs

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: Act 1988 as Amendment in 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.09.2020 12.00 hrs Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.09.2020 Time நேரம் : 08.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.09.2020 08.30 hrs Time நேரம் 5, 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North West - About 5 km

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி District Rural Development Agency District collectorate campus Thiruvallur.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K.M. Balaji (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் Munusamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 49 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி No. 226, 3rd Street, Sampathkumar Nagar, Ekkadu, Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Arumugam, A2, Assistant-II District Rural Development Agency, District collectorate Campus. Thiruvallur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Discreet enquiry conducted.

Seen [illegible] 10/9/2020

Seen. [illegible] 10/9/2020

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demand bribe amount Rs. 6,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheets attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed N. Sumathra Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 10/09/20 [signature] 10/09/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10/09/2020 at 12.30 hrs

Name: பெயர் N. Sumathra
Rank: நிலை Inspector of Police ............ No. எண்
VS AC, Thiruvallur.
10/09/2020

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.3/AC/2020/TLR, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

பணிந்து அனுப்பப்பட்டது,

இன்று 10.09.2020-ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் திருமதி.N.சுமத்ரா, காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருந்தபோது, திருவள்ளூர் மாவட்டம், ஈக்காடு, எண்.226, 3வது தெரு, சம்பத்குமார் நகர், K.M.பாலாஜி, வயது.49, த/பெ. முனுசாமி என்பவர் ஆஜராகி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் K.M.பாலாஜி, வயது.49, த/பெ. முனுசாமி,எண்.226, 3வது தெரு, சம்பத்குமார் நகர், ஈக்காடு, திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம், பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம், அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது மனைவி சுஜாதா, வயது.44, மகன் பிரவீன்குமார், வயது.24, மற்றும் மகள் திவ்யபாரதி, வயது 21 ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் எனது மனைவி சுஜாதா பெயரில் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளேன். மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.867/2018/அ2, நாள்.25.09.2018-ன்படி ஒப்பந்தபுள்ளி அறிக்கையின்படி SDRF (மாநில பேரிடர் மேலாண்மை நிதி) 2017-18 ஆம் நிதியாண்டில் திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராமன்கோயில் ஊராட்சி மடத்துக்குப்பம் முதல் விடையூர் ரோடு வரை சாலை பழுதுபார்த்தல் பணி (பணிகள்-5) ரூபாய்.3,00,000/- மதிப்பீட்டில் வேலையை செய்து முடிக்க பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணியை எனது மனைவி திருமதி.பி.சுஜாதா அவர்களுக்கு கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.3184/2018/அ2, நாள்.24.05.2019-யின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி, கடந்த 2019 ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் கல்வெட்டு பணிகள் முடிக்கப்பட்டது. இப்பணிகள் நிறைவுப்பெற்றது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு தெரிவித்து, மேற்படி அதிகாரிகள் ஆய்வு செய்தபின் ஒரு சில குறைபாடுகள் தெரிவித்ததின்பேரில் அடுத்த ஒரு மாதத்தில் அந்த குறைபாடுகளும் சரிசெய்யப்பட்டது. மேற்கண்ட பணிகள் ரூபாய்.2,99,913/- மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் இறுதிப்பட்டியல் மற்றும் பணிமுடிவறிக்கை உதவி செயற்பொறியாளரிடமிருந்து புகைப்பட நகலுடன் வரப்பெற்று இப்பணிக்கான நிதி ஒதுக்கீடு வழங்கும் பொருட்டு ஆவணங்கள் தயார் செய்து கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் பரிந்துரையின்பேரில் உதவிச் செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர்,

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.3/AC/2020/TLR, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continues . . .)**

திருவள்ளூர் உபகோட்டம் (இரு) ஈக்காடு அவர்களுக்கு பரிந்துரை செய்து, அவர் ஆவணங்களை சரிப்பார்த்து கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கடிதத்துடன் இணைத்து 22.07.2020 அன்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் என் மனைவிக்கு சேர வேண்டிய நிதியான ரூபாய்.2,99,913/- சம்பந்தமாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு சென்று விசாரித்தோம். அங்கு யாரும் எங்களுக்கு சரியான பதில் அளிக்கவில்லை. என் மனைவி சுஜாதா வீட்டு வேலைகளை கவனித்து வருவதால் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வரமுடியாத காரணத்தால் என்னை இது சம்பந்தமாக மேற்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைத்து விசாரிக்க சொன்னார். நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது அங்கிருந்தவர்கள் சாலை ஒப்பந்த பணிமுடித்த நிதி ஒதுக்கீட்டிற்கான கோப்பு சம்பந்தமாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிபுரியும் A2, உதவியாளர்-II, திரு.ஆறுமுகம் அவர்களை சந்தித்து விசாரிக்குமாறு தெரிவித்தனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஆறுமுகம், (A2, உதவியாளர்-II) அவர்களை சந்தித்து மேற்படி பணி முடித்தும் ஏன் இதுவரை எங்களுக்கு வரவேண்டிய நிதி ஏன் தாமதம் ஆகிறது என்று கேட்டேன். அதற்கு அவர், சார் இது சம்பந்தமான பார்மாலிட்டி எல்லாம் தெரியாதா, காலமெல்லாம் மாறிபோச்சு, மாவட்ட ஆட்சியருக்கும், PD க்கும், பொறியாளருக்கும் பணம் கொடுத்தால் தான் உங்கள் ஆவணம் கையொப்பம் ஆகும் என தெரிவித்தார். அன்றிலிருந்து வாரத்திற்கு மூன்று முறை தொடர்ந்து நான் மேற்படி அலுவலகத்திற்கு சென்று வந்தேன், மேலும் அந்த அலுவலகம் செல்லும் ஒவ்வொரு நாளும் சரியான தகவலோ, முறையான பேச்சோ இல்லை. ஒவ்வொரு நாளும் நான் அலுவலகம் செல்லும்போது எல்லாம் சம்மந்தமில்லாமல் ஏதோ ஒரு குறை சொல்லி அனுப்புவார். அதன்பின் 08.09.2020 ஆம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஆறுமுகம், (A2, உதவியாளர்-II) அவர்களை சந்தித்து மேற்படி எனக்கு வரவேண்டிய நிதி சம்பந்தமாக கேட்டபோது அவர் தங்களுக்கு சேரவேண்டிய தொகை 3 லட்சத்திற்கு 2% சதவிகிதம் ரூபாய்.6,000/-ம் லஞ்சமாக தரவேண்டும் என்று கூறினார். நான் எனது குடும்ப சூழ்நிலையை சொல்லி எனது

**(FIR contents, continues to next page.....)**

மேற்படி லஞ்சப்பணம் வருகின்ற 10.9.2020ம் தேதி கொடுக்க சொன்னேன்

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.3/AC/2020/TLR, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. continues . . .)**

இயலாமையை கூறியபோது. மேற்படி தொகையுடன் 10.09.2020 ந்தேதி வந்தால் தான் நிதி கிடைக்கும் என்று கராராக கூறி அனுப்பிவிட்டார். என்னிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால் வீட்டிற்கு சென்று நடந்த விவரங்கள் அனைத்தும் என் மனைவி சுஜாதாவிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் வட்டிக்கு கடன் வாங்கி பணியை முடித்து கொடுத்து இவ்வளவு நாட்கள் கடந்தும் அதற்கு உண்டான பணத்தைக் கொடுக்கவில்லை. மேலும் ரூ.6,000/- லஞ்சம் கேட்டால் என்ன செய்வது அதனால் லஞ்ச பணம் கொடுக்க விரும்பாமல் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க என் மனைவி சொன்னதின்பேரில், மேற்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஆறுமுகம், (A2, உதவியாளர்-II) அவர்கள் கேட்ட ரூ.6,000/- லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததால் நான் இன்று 10.09.2020ஆம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் புகார் அளித்தேன். எனவே என்னிடம் லஞ்சம் பணம் கேட்ட திரு.ஆறுமுகம் (A2, உதவியாளர்-II) மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு. (ஒப்பம் K.M.பாலாஜி) 10/09/2020. Honoured Madam, I received the above complaint on 10.09.2020 at 08.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Arumugam, A2, Assistant-II, District Rural Development Agency, District Collectorate Campus, Thiruvallur, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.3/AC/2020/TLR u/s 7 of The Prevention of Corruption Act 1988 as Amendment in 2018 on 10.09.2020 at 10.00 hrs The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

10/9/2020

**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**